*கவனிக்க.- 2020.09.25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி III மற்றும் IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2196 - 2020 ඔක්තෝබර් මස 02 වැනි සිකුරාදා - 2020.10.02

*2196 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1360 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1366 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1364 | ஏல விற்பனைகள் | 1370 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**-(i) சிவில் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தம்) 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயது 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது

(iii) திருமணப் பதிவு (திருத்தம்) 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1359 - B 82063 - 405 (2020/ 10)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

*காணி அமைச்சு*

*இலங்கை நில அளவைத் திணைக்களம்*

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2021*

*கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் விலைமனுக்கோரல்கள் 2020.10.29 ஆந் திகதி அன்று பிற்பகல் 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக்கோரல்கள் பி. ப. 2.05 மணிக்குத் திறக்கப்படும்.*

| *மாகாணம்* | *மாவட்டம்* | *பிரதேச நில அளவை அலுவலகம்* | *கேள்வி மனு ஒப்படைத்தல்* | *அருகில் உள்ள நகரம்* | *கட்டிடம் தேவைப் படும் திகதி* |
|---|---|---|---|---|---|
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | பதவிய | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், அநுராதபுரம். | கெபிதிகொல்லேவ நகருக்கு அருகில் | 2021.03.02ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | அநுராதபுரம் 2 | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், அநுராதபுரம். | அநுராதபுரம் நகருக்கு அருகில் | 2021.03.02ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| வட மத்திய மாகாணம் | அநுராதபுரம் | திரப்பனை | மாகாண நில அளவையாளர் நாயகம் (வடமத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், அநுராதபுரம். | திரப்பனை நகருக்கு அருகில் | 2021.03.02ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| வட மாகாணம் | கிளிநொச்சி | கிளிநொச்சி -2 | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா. | கிளிநொச்சி நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| வட மாகாணம் | வவுனியா | வவுனியா - 2 | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா. | வவுனியா நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| வட மாகாணம் | முல்லைத்தீவு | முல்லைத்தீவு | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா. | முல்லைத்தீவு நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | கட்டிடம் தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| வட மாகாணம் | முல்லைத்தீவு | மான்குளம் | மாகாண நில அளவையாளர் நாயகம் (வட மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், வவுனியா. | மான்குளம் நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மத்திய மாகாணம் | கண்டி | மினிபே | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய. | மினிபே நகருக்கு அருகில் | 2021.03.07ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மத்திய மாகாணம் | கண்டி | ஹாரிஸ் பத்து | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய. | ஹாரிஸ்பத்துவ நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மத்திய மாகாணம் | கண்டி | திகன | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய. | திகன நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மத்திய மாகாணம் | கண்டி | யட்டி நுவர | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய. | யட்டிநுவர நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மத்திய மாகாணம் | மாத்தளை | லக்கல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மத்திய மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கன்னொருவ, பேராதெனிய. | லங்கல நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மேல் மாகாணம் | கம்பஹா | பியகம | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கிருள வீதி, நாராஹேன்பிட்ட. | மாகொள நகருக்குஅருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மேல் மாகாணம் | களுத்தறை | பெலவத்த | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கிருள வீதி, நாராஹேன்பிட்ட. | பெலவத்த நகருக்கு அருகில் | 2021.01.20ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | கேள்வி மனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | கட்டிடம் தேவைப் படும் திகதி |
|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | களுத்தறை | ஹொரன | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கிருள வீதி, நாராஹேன்பிட்ட. | ஹொரன நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| மேல் மாகாணம் | கம்பஹா | அத்தனகல்ல | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், கிருள வீதி, நாராஹேன்பிட்ட. | அத்தனகல்ல நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| ஊவா மாகாணம் | பதுளை | வெலிமடை | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், பதுளை. | வெலிமடை நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| ஊவா மாகாணம் | மொணராகலை | சியம்ப லாண்டுவ | மாகாண நில அளவையாளர் நாயகம் (ஊவா மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், பதுளை. | சியம்பலாண்டுவ நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | களவான | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | களவான நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |
| சப்பிரகமுவ மாகாணம் | இரத்தினபுரி | பலாங்கொட | மாகாண நில அளவையாளர் நாயகம் (சப்பிரகமுவ மாகாணம்), மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகம், புதிய நகரம், இரத்தினபுரி. | பலாங்கொட நகருக்கு அருகில் | 2021.01.01ஆந் திகதியில் இருந்து 02 வருடங்களுக்கு |

**பூரணப்படுத்தப்பட வேண்டிய பொதுவான தேவைப்பாடுகள் :**

அனைத்து கட்டிடங்களும் பாதுகாப்பு சுற்று மதில் அல்லது கம்பி வேலி மூலமாக பாதுகாக்கப்பட்டிருத்தல் வேண்டும். தண்ணீர்க் குழாய் வசதியினைக் கொண்டிருப்பதுடன் அழுக்குகள் மற்றும் வடிநீர் செல்வதற்கான முறையான வடிகாலமைப்பு இருத்தல் வேண்டும். தனியான நீர்மானி மற்றும் மின்மானி என்பன வேறு வேறாக பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும். உரிய இடத்திற்கு அண்மித்த பிரதேசங்களில் இருந்து அதிக ஒலியை எழுப்பக்கூடிய தொழிற்சாலைகளோ அல்லது அது போன்ற வேறு ஏதாவது பட்டறைகளோ இல்லாதிருத்தல் வேண்டும். கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டிருப்பது பெருந்தெருவுக்கு அண்மித்ததாக இல்லாதிருப்பின் அதற்குச் செல்வதற்கு முறையான போக்குவரத்துப் பாதை இருத்தல் அவசியமாகும். குறைந்தபட்சம் மூன்று வண்டிகள் நிறுத்தி வைக்கக்கூடிய இடவசதியும் அத்துடன் வாகனத் தரிப்பிட வசதியும் இருத்தல் வேண்டும். அதிகாரிகள் 10 பேருக்கு போதுமான அறைகள் கொண்ட இடவசதி இருத்தல் வேண்டும். கட்டிடத்தின் இடவசதி ஆகக் குறைந்தது 3000 வர்க்க அடியாவது இருக்க வேண்டும்.

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூரணப்படுத்த வேண்டிய பொதுவான தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச நில அளவை அலுவலகங்களை வாடகைக்குப் பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2020.10.29 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகம் அலுவலகத்திற்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படவோ அல்லது நேரடியாக கையளிக்கப்படவோ வேண்டும்.*

*ஏ.எல்.ஷியாமலி சித்திரலேகா பெரேரா,*
*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,*
*கிருல வீதி,*
*கொழும்பு 5,*
*2020.09.21.*

**பிரதேச நில அளவை அலுவலகங்களுக்குக் கட்டிடங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளல் - 2021**
**விலைமனுக் கோரல் விண்ணப்பப்படிவம்**

**கட்டிட உரிமையாளருக்காக:**

*01. முழுப்பெயர் :----.*

*02. முகவரி :----.*

*03. தொலைபேசி இலக்கம் :----.*

*04. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :----.*

**கட்டிடம் தொடர்பாக :**

*01. எந்த பிரதேச நில அளவை அலுவலகத்திற்காக கட்டிடம் வாடகைக்கு வழங்கப்படவுள்ளது? ----.*

*02. மாதாந்த வாடகைத் தொகை ? ----.*

*03. ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்தின் முகவரி: ----.*

*04. உரிய நகரத்தில் இருந்து ஸ்தாபிக்கப்பட்டுள்ள இடத்திற்கு உரிய தூர அளவு கி. மீ : ----.*

*05. இடத்தின் விஸ்தீரணம் : ----.*

*06. கட்டிடத்தின் சதுர அடியளவும் அறைகளின் எண்ணிக்கை தொடர்பான விபரங்களும் :----.*

*07. தனியாக அவதானிக்கக் கூடிய நீர்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.*

*08. தனியாக அவதானிக்கக் கூடிய மின்மானி பொருத்தப்பட்டுள்ளதா? ----.*

*09. பாதுகாப்பு எல்லை தொடர்பான விபரம் (மதில் /கம்பி வேலி/. . . . . . ): ----.*

*10. நிறுத்தி வைக்கக்கூடிய வாகனங்களின் எண்ணிக்கை : ----.*

*மேலே என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவை என்றும், வழங்கப்பட்டுள்ள தகவல்கள் தவறானவை எனத் தெரியவரும் பட்சத்தில் என்னால் அனுப்பப்பட்டுள்ள இந்த விலைமனு நில அளவையாளர் நாயகத்தினால் நிராகரிக்கப்படும் என்பதனை நான் நன்கு அறிவேன் என்றும் இத்தால் அறியத் தருகின்றேன்.*

---------------------------------- .
*விண்ணப்பதாரியின் கையொப்பம்.*

*10-417*

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## நீதிவான் நீதிமன்றம் - அக்கரைப்பற்று

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சான்றுப் பொருட்களின் ஏல விற்பனை- 2020

அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாத கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் 2020.10.11 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவரும் இருப்பின் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன் வைக்க வேண்டும்.

2. பொருட்களை மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் ஏல விற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்பதாக பார்வையிடலாம்.

3. பகிரங்க ஏல விற்பனையின் போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்களுக்குரிய விலை கிடைக்கப் பெறாதவிடத்து ஏல விற்பனையிலிருந்து மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

4. விற்பனை செய்யப்பட்ட பொருட்களுக்கான பணத்தை உடன் செலுத்தி உடனடியாகவே நீதிமன்ற வளாகத்திலிருந்து அகற்ற வேண்டும்.

5. எல்லாக் கொடுப்பனவுகளும் காசாகவே செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. பொருட்களைக் கொள்வனவு செய்வோர் தங்களது அடையாளத்தை உறுதிப்படுத்த தேசிய ஆள்அடையாள அட்டையைக் கொண்டு வர வேண்டும்.

எம். எச். எம். ஹம்ஸா,
நீதிவான் /மாவட்ட நீதிபதி,

நீதிவான் நீதிமன்றம்,
அக்கரைப்பற்று.

| தொடர் இல. | வழக்கு இல. | வகை | சான்றுப் பொருட்கள் |
|---|---|---|---|
| 01. | 46967/Mis | EP-RD- 1920 | உழவு இயந்திரம் |
| 02. | 46967/ Mis | EP - RX- 5122 | இழுவைப் பெட்டி |
| 03. | 54650/ Mis<br>53741/ Mis<br>55231/ Mis | CP - PR - 6197 | டிமோ பட்டா லொறி |
| 04. | AR/2216 | NN | மோட்டார் சைக்கிள் |
| 05. | AR/565/19 | NN | மோட்டார் சைக்கிள் |
| 06. | 56688/Mis | EP - PY - 0690 | டிமோ பட்டா லொறி |
| 07. | 57189/Mis | EP - RX - 6440 | இழுவைப் பெட்டி |
| 08. | AR/850 | EP - JX - 3934 | மோட்டார் சைக்கிள் |
| 09. | 37858/MT | EP - GS - 7912 | மோட்டார் சைக்கிள் |
| 10. | AR/561/19 | 95 ශ්‍රී 8739 | மோட்டார் சைக்கிள் |
| 11. | 49626/ MT(B/9816/17) | | துவிச்சக்கர வண்டி |
| 12. | B/4916/10 | | துவிச்சக்கர வண்டி |
| 13. | 48054/ MT(8750/16) | | துவிச்சக்கர வண்டி |
| 14. | 48681/ PC(B/9652) | | துவிச்சக்கர வண்டி |
| 15. | 54674 MT(B/565/18) | | துவிச்சக்கர வண்டி |
| 16. | 56724/PC (B/481/18) | | துவிச்சக்கர வண்டி |
| 17. | B/8085/15 | | மோட்டார் சைக்கிள் |
| 18. | 32039/ MT(B/5258/10) | | மோட்டார் சைக்கிள் |
| 19. | 35696/ MT(B/5928/11) | | மோட்டார் சைக்கிள் |
| 20. | 36157/ MT(B5532) | | துவிச்சக்கர வண்டி |
| 21. | 32558 MT(B5431) | | துவிச்சக்கர வண்டி |
| 22. | 58484/MIS | | வாளி |
| 23. | 58602/MIS | | வாளி |
| 24. | 58614/MIS | | வாளி |
| 25. | 58634/MIS | | வாளி |
| 26. | 58658/MIS | | சவள் |
| 27. | 58726/MIS | | சவள் |
| 28. | 58782/ MIS | | வாளி |
| 29. | 58830/MIS | | சவள்/வாளி |
| 30. | 58891/MIS | | சவள் |
| 31. | 58926/MIS | | வாளி |
| 32. | 58927/MIS | | வாளி |
| 33. | 58928/MIS | | வாளி |
| 34. | 58929/MIS | | வாளி |
| 35. | 59076/MIS | | சவள்/வாளி |

| தொடர் இல. | வழக்கு இல. | வகை | சான்றுப் பொருட்கள் |
|---|---|---|---|
| 36. | 58853/MIS | | |
| 37. | 58859/MIS | | |
| 38. | 58860/MIS | | |
| 39. | 58873/MIS | | |
| 40. | 58926/MIS | | |
| 41. | 58928/MIS | | |
| 44. | 58929/MIS | | |
| 45. | 58968/MIS | | |
| 46. | 58970/MIS | | |
| 47. | 59035/MIS | | மண் |
| 48. | 59039/MIS | | |
| 49. | 59041/MIS | | |
| 50. | 59040/MIS | | |
| 51. | 59036/MIS | | |
| 52. | 59043/MIS | | |
| 53. | 59093/MIS | | |
| 54. | 59092/MIS | | |
| 55. | 59118/MIS | | |
| 56. | 59119/MIS | | |
| 57. | 59045 | | |

| தொடர் இல. | வழக்கு இல. | வகை | சான்றுப் பொருட்கள் |
|---|---|---|---|
| 58. | 58861 | | |
| 59. | 58862 | | |
| 60. | 58863 | | |
| 61. | 58877 | | |
| 44. | 58918 | | |
| 45. | 58917 | | |
| 62. | 58916 | | |
| 63. | 58966 | | |
| 64. | 59002 | | |
| 65. | 58998 | | மண் |
| 66. | 59028 | | |
| 67. | 59034 | | |
| 68. | 59038 | | |
| 69. | 59042 | | |
| 70. | 59037 | | |
| 71. | 59044 | | |
| 72. | 59046 | | |
| 73. | 59047 | | |

*10-87*

---

## நீதிவான் நீதிமன்றம் - கல்முனை

*நீதிமன்ற சான்றுப் பொருட்கள் ஏல விற்பனை- 2020*

*கல்முனை நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் உரிமை கோரப்படாததுமான கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள் (மோட்டார் சைக்கிள்) எதிர்வரும் 2020.10.10ஆந் திகதி காலை 9.30 மணிக்கு இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*1. இப் பொருட்களுக்காக உரிமை கோருபவர்கள் எவருமிருந்தால் ஏல விற்பனை தொடங்குவதற்கு முன்னர் தங்களது உரிமைக் கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.*

*2. பொது மக்கள் எவரும் இந் நீதிமன்றப் பதிவாளரின் அனுமதியுடன் குறிப்பிட்ட பொருட்களை ஏல விற்பனை தொடங்குவதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பார்வையிடலாம்.*

*3. பொருட்களை விலைவைத்து வாங்குவோர் தமது அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேசிய ஆள் அடையாள அட்டையை கொண்டு வருதல் வேண்டும்.*

*4. பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் உடனடியாக பணத்தைச் செலுத்தி உரிய பொருட்களை இந்நீதிமன்ற வளாகத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும்.*

5. சகல கொடுப்பனவுகளும் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. இப்பொருட்களில் எவற்றுக்கேனும் விலைகள் ஒவ்வாத பட்சத்தில் விற்பனையிலிருந்து மீளப் பெறுவதற்கு இந்நீதிமன்றத்திற்கு உரிமையுண்டு.

ஐ.என்.றிஸ்வான்,
நீதிவான் .

நீதிவான் நீதிமன்றம்,
கல்முனை.

பகிரங்க ஏல விற்பனை பொருட்கள் விபரம்- 2020.10.10

| தொடர் இலக்கம் | வழக்கு இலக்கம் | பதிவு செய்யப்பட்ட வாகன இலக்கம் | சான்றுப்பொருள் விபரம் |
|---|---|---|---|
| 01. | B/70/2020 | EP BGH - 2871 | மோட்டார் சைக்கிள் |
| 02. | 95929/PE | EP - BDX - 3351 | மோட்டார் சைக்கிள் |
| 03. | AR/72 | EP - JT - 9767 | மோட்டார் சைக்கிள் |
| 04. | AR/1214/19 | EP - BEW 8347 | மோட்டார் சைக்கிள் |
| 05. | 94981/PC | EP - HX 7869 | மோட்டார் சைக்கிள் |
| 06. | 9964/19 | EP - XK 0884 | மோட்டார் சைக்கிள் |
| 07. | 93502 | EP - MN 2588 | மோட்டார் சைக்கிள் |
| 08. | 94391 | EP - MX 2876 | மோட்டார் சைக்கிள் |
| 09. | 7944 | EP - BEF 2160 | மோட்டார் சைக்கிள் |
| 10. | 93818 | EP - UG 6301 | மோட்டார் சைக்கிள் |
| 11. | 95675 | HH - 6858 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 12. | AR /1281 | 154 - 5065 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |
| 13. | AR/1215 | 157 - 0691 | மோட்டார் சைக்கிள் (உதிரிப்பாகத்திற்கு மாத்திரம்) |

10-228

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் பிரகாரம் கீழ்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : புரொப்பெஷனல் சைக்கொலொஜிக்கல் கவுன்செலர்ஸ் அசோசியேஷன் (கெரண்டி) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட திகதி: 2020.01.03
பதிவிலக்கம்: பீவீ 00219075
பதிவு முகவரி: இல.176/A/1 விஜய மாவத்தை, போரே, அதுருகிரிய

கம்பனிச் செயலாளர்.

10- 20

## செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் பதிவிலக்கம் (PV 108669) பகிரங்க அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242(3) b ஆம் பிரிவின் நியதிகளின் படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115 ) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் ( பதிவிலக்கம் - PV 108669) என்பவற்றுடனான உத்தேசிக்கப்பட்ட ஒன்று சேர்க்கை பற்றிச் சட்டத்தின் 242ஆம் பிரிவின் (1) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படியான பகிரங்க அறிவித்தல்

2020,செத்தெம்பர் 30 ஆந்திகதியன்று செரன்டிப்பூட்ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் முதன்மைக் கம்பனியாக நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற் (பதிவிலக்கம் PV 00215115) அமைகின்றது. நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட் ) லிமிற்றெற்

பணிப்பாளர் சபையுடன், செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் பணிப்பாளர் சபையும் ஒன்றிணைக்க தீர்மானிக்கப்பட்டது. நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (PV 00215115 ) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் சட்டத்தின் 242(1)ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115 ) ஒன்று சேர்ப்பதற்கு தீர்மானித்தது. இதன் மூலம் நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் தொடர்ந்திருக்கும் என்பதுடன், செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் இல்லாதொழியும்.

இவ்வறிவித்தலிலிருந்து 20 நாட்களுக்குக் குறையாததாக வுள்ள ஒரு நாளன்று கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115), செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் (PV 108669) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தைப் பதிவு செய்வதற்காகக் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுவதனைப் பின்பற்றிக் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்று சேர்க்கைச் சான்றிதழை வழங்குவதன்மேல் ஒன்று சேர்க்கை பயனுறும்.

*சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றை ( PV 00215115) செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் (PV108669) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதனை அங்கீகரிக்கின்ற சபைகளினாலான தீர்மானங்களாக அமைகின்றனவாகக் கருதப்பட வேண்டிய ஒன்று சேர்க்கை உத்தேசத்தின் பிரதிகள், வழமையான வேலை நேரங்களின்போது கொழும்பு2, வொக்ஸ்வோல் வீதி, 141/3ஆம் இலக்கத்திலுள்ள கம்பெனிச் செயலாளரான சார்ட் பிஸ்னஸ் சிஸ் டம் ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் அலுவலகத்தில், கம்பெனியின் எவரேனும் பங்கு தாரரின் அல்லது கடன் கொடுநரின் அல்லது எந்த ஆளுக்கு கம்பெனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளின் பரிசோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் அல்லது எந்த ஆளுக்குக் கம்பெனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் கம்பெனிக்குச் செய்யப்படும் கோரிக் கையின்மேல், ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தின் பிரதியொன்று கட்டணமின்றி அவருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றின் பணிப்பாளர் சபையினது கட்டளைப்படி,

சார்ட் பிஸ்னஸ் சிஸ்டம்ஸ்
(பிறைவேட்) லிமிற்றெற்,
செயலாளர்.

2020, செத்தெம்பர் 30.

10- 84

## நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115) பகிரங்கஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (சட்டம்) 242(3) b ஆம் பிரிவின் நியதிகளின் படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115 ) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் ( பதிவிலக்கம் - PV 108669) என்பவற்றுடனான உத்தேசிக்கப்பட்ட ஒன்று சேர்க்கை பற்றிச் சட்டத்தின் 242ஆம் பிரிவின் (1) என்னும் உட்பிரிவின் நியதிகளின்படியான பகிரங்க அறிவித்தல்

2020, செத்தெம்பர் 30 ஆந் திகதியன்று செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற்றினால் முழுமையாகச் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட துணைநிலைக் கம்பனியா கவுள்ள நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (பதிவிலக்கம் PV 00215115 ) மற்றும் நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றேற் (PV 00215115) என்பவற்றின் பணிப்பாளர் சபையும், ஒன்றிணைக்க தீர்மானிக்கப்பட்ட நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற்றின் (PV 00215115) மற்றும் செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) சட்டத்தின் 242(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115 ) ஒன்று சேர்ப்பதற்கு தீர்மானித்தன. இதன் மூலம் (நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் தொடர்ந்திருக்கும் என்பதுடன், செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் (பிறைவேட்) லிமிற்றெற் இல்லாதொழியும்.

இவ்வறிவித்தலிலிருந்து 20 நாட்களுக்குக் குறையாததாக வுள்ள ஒரு நாளன்று கூறப்பட்ட சட்டத்தின் 243 ஆம் பிரிவில் தரப்பட்டுள்ள ஆவணங்களுடன் சேர்த்து நியுடிபல் ட்ரிலெர் (பிறைவேட்) லிமிற்றெற் (PV 00215115 ) செரன்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் (PV 108669) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தைப் பதிவு செய்வதற்காகக் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதியிடம் கோப்பிடுவதனைப் பின்பற்றிக் கம்பெனிகள் பதிவாளர் தலைமையதிபதி சட்டத்தின் 244(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி ஒன்று சேர்க்கைச் சான்றிதழை வழங்குவதன்மேல் ஒன்று சேர்க்கை பயனுறும்.

* சட்டத்தின் 242(4) ஆம் பிரிவின் நியதிகளின்படி நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றை ( PV 00215115) சென்டிப் பூட் ப்ரொடக்ஸ் ( பிறைவேட்) லிமிற்றெற்றை ( PV 108669 ) என்பவற்றுடன் ஒன்று சேர்ப்பதனை அங்கீகரிக்கின்ற சபைகளினாலான தீர்மானங்களாக அமைகின்றனவாகக் கருதப்பட வேண்டிய ஒன்று சேர்க்கை உத்தேசத்தின் பிரதிகள், வழமையான வேலை நேரங்களின்போது கொழும்பு2, வொக்ஸ்வோல் வீதி, 141/3 ஆம் இலக்கத்திலுள்ள கம்பனிச் செயலாளரான க்ரூப் மெனேச்மென்ட் அன் செக்ரடரியல் சேவிசஸ் ( பிறைவேட்) லிமிற்றெற் அலுவலகத்தில், கம்பெனியின் எவரேனும் பங்குதாரரின் அல்லது கடன் கொடுநரின் அல்லது எந்த ஆளுக்கு கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த ஆளின் பரிசோதனைக்காகக் கிடைக்கக்கூடியதாகவுள்ளன.

கம்பனியின் பங்குதாரர் அல்லது கடன்கொடுநர் ஒருவர் அல்லது எந்த ஆளுக்குக் கம்பனி கடப்பாடுடையதாகவுள்ளதோ அந்த எவரேனும் ஆள் கம்பனிக்குச் செய்யப்படும் கோரிக் கையின்மேல், ஒன்று சேர்ப்பதற்கான உத்தேசத்தின் பிரதியொன்று கட்டணமின்றி அவருக்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையவராகவுள்ளார்.

நியுடிபல் ட்ரிலெர் ( பிறைவேட்) லிமிற்றெற்றின் பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

க்ரூப் மெனேச்மென்ட் அன்
செக்ரடரியல் சேவிசஸ்
(பிறைவேட்) லிமிற்றெற் ,
செயலாளர்.

2020, செத்தெம்பர் 30.

10- 85

---

## எஸ் என் லோ கோப்பரேட் செக்ரட்டறீஸ் (பிறைவட்) லிமிட்டட்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

எஸ் என் லோ கோப்பரேட் செக்ரட்டறீஸ் (பிறைவட்) லிமிட்டட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்றை 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ஆந் திகதி பீவி 00226937 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும், புதிய கம்பெனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரியானது ஹெச் கியூ கொழும்பு, இல. 464A, ரீ .பீ . ஜயா மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நான் பகிரங்க அறிவித்தல் தருகிறேன்.

தமாலிதனேஷா ஜயசேன,
கம்பனிச் செயலாளர்.

எஸ் என் லோ கோப்பரேட் செக்ரட்டறீஸ்
( பிறைவட்) லிமிட்டட்,
ஹெச் கியூ கொழும்பு,
இல.464A, ரீ.பீ. ஜயா மாவத்தை,
கொழும்பு 10.

10-75

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பிரீமியம் பில்டிங் கன்ட்ரக்டர்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 0026462
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.27
பதிவு முகவரி : இல. 9, சேர்கியூலர் பாதை, பொல் கொட்டுவ, பேருவளை

கம்பனிச் செயலாளர்.

10-152

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் படி பின்வரும் நிறுவனம் இணைக்கப்பட்டுள்ளது என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது-

கம்பனியின் பெயர் : ஓரியண்ட் டிரேடிங் & மனுபக்சரிங் கம்பனி (பிரைவட்) லிமிட்டட்
நிறுவனத்தின் எண்: பீவீ 0022474
கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி: 333/ஏ/1, வேபட வீதி, உடுப்பில, தெல்கொட
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020, யூலை 22

கம்பனிச் செயலாளர்.

10-153

---

## லயன் சொஃப்ட்வெயார் (பீவீடீ) எல்டீடி

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் கூட்டிணைக்கப்படல் தொடர்பான பகிரங்க அறிவித்தல்

லயன் சொஃப்ட்வெயார் (பீவீடீ) எல்டீடி என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2020ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 25 ஆந் திகதி பீவி 00226323 என்ற இலக்கத்தின் கீழ் கூட்டிணைக் கப்பட்டுள்ளதென்பதையும்,புதிய கம்பனியின் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசமானது எம் & என் கட்டிடம், (5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ், கொழும்பு 3 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

பிரணவன் நீலகண்டன்,
பணிப்பாளர்,
என் அன்ட் என் ஏஜென்ஸ்
அன்ட் செக்ரட்டறீஸ்
(பிறைவேட்) லிமிட்டட்,
கம்பனியின் கம்பனிச்
செயலாளர்கள்.

எம் & என் கட்டிடம்,
(5 ஆம் மாடி), இல. 2, டீல் பிளேஸ்,
கொழும்பு 3.

10-74

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ் , பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஓல் ஐலன்ட் டெய்ரி அசோசியேஷன்ஸ்
பதிவிலக்கம்: GA 3487

கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2018.05.28
பதிவு முகவரி : மே/பா சிலோன் சேம்பர் ஒப் கொமர்ஸ், 50, நவம் மாவத்தை, கொழும்பு 2

பணிப்பாளர்.

10- 156

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : டி.என்.எஸ். ப்ளான்டேஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00225801
பதிவு முகவரி : இல. 509/1, பழைய கொட்டாவ வீதி, மிரிஹான, நுகேகொட
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.12

கம்பனிச் செயலாளர்.

10-333

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : ஹான்ஸ் டிரெவல் லொஜிஸ்டிக்ஸ் (பீவீட) எல்டீடி
பதிவிலக்கம்: பீவீ 00226951
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 44, இஹளகம, மாபோதல, மினுவன்கொட
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.09.05

கம்பனிச் செயலாளர்.

10-341

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : பியோர் ட்ரொப் லங்கா வைன் ப்ரேவர்ஸ்(பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00209323
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 178A, மெத தும்மளதெனிய, வென்னப்புவ
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2019.02.27

கம்பனிச் செயலாளர்.

10-404

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

சிங்கப்பூரில் உரிய முறையில் கூட்டிணைக்கப்பட்ட , சிங்கப்பூர் Bizhub, Oxley, 01-12, 61 UB1 வீதியில் தமது பதிவு அலுவலத்தைக் கொண்டுள்ள, மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் தமது பதிவு அலுவலகத்தைக் கொண்டுள்ள பதிவிலக்கம் FC 1353 மற்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கொழும்பு -05 , ஏ தாபரே மாவத்தை, இல. 18/229A இல் தமது பதிவு முகவரியையுடைய ஜெனரேஷன் நெக்ஸ்ட் கொமியுனிகேஷன்ஸ் பிடிஈ, எல்டிட ( இதன் பின்னர் மேற்படி வெளிநாட்டுக் கம்பனியென அழைக்கப்படும் மற்றும் குறிப்பிடப்படும்) ஆகிய நாம், இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்வதாவது, 2016, செத்தெம்பர் 26 ஆந் திகதியையுடைய மற்றும் மேற்படி வெளிநாட்டுக் கம்பனியால் நிறைவேற்றப்பட்ட, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பத்தரமுல்லயிலுள்ள பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் எழுத்துமூல அதிகாரம் மற்றும் அற்றோணித் தத்துவங்கள் பதிவேட்டின் நாட் புத்தக இல. 112, இருமடித்தாள் 173 , அத்தியாயம் 15953 இன் கீழாக பதிவு செய்யப்பட்டு, 2017, சனவரி 03 ஆந் திகதி, மேற்படி இலங்கைக் குடியரசில் கல்கிஸ்ஸ, வித்யாலய வீதி, 14ஏ ஐச் சேர்ந்த ஜீவக்க வினேஷ் எட்வர்ட் பெரேராவை (731530513V ஆம் இலக்க தேசிய அடையாள அட்டை உரித்தாளர்) மேற்படி வெளிநாட்டுக் கம்பனியின் சட்ட ரீதியான அற்றோணித் தத்துவதாரராக நியமித்த விசேட அற்றோணித் தத்துவம், 2020, ஓகத்து இருபத்தைந்தாம் (25) திகதி செயல்வலும்பெறும் வகையில் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகின்றது என்பதாகும். 2020, ஓகத்து மாதம் இருபத்தைந்தாம் (25) திகதிக்குப் பின்னர், மேற்படி வெளிநாட்டுக் கம்பனி சார்பாக மேற்படி ஜீவக்க வினேஷ் எட்வர்ட் பெரேராவினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல் அல்லது செயற்பாடுகளுக்கும் நாம் பொறுப்பாக இருக்க மாட்டோம் என மேலும் அறிவித்துக் கொள்கின்றோம்.

ஜெனரேஷன் நெக்ஸ்ட் கொமியுனிகேஷன்ஸ் பிடிஈ, எல்டிட,
முதன்மையாளர்.

10- 33

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பிலியந்தல, தெல்தர, புதிய வீதி, இலக்கம் 241 என்ற இடத்தில் வதியும், தே.அ.அ.இல. 485481052V ஐ உடைய சில்வா பியுமா தம்மிகா எனப்படும் அன்த்ராதிகே சில்வா பியுமா தம்மிகா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு திரு. பி.ஜீ.ஞானசிறி சில்வாவினால் 2015.03.27 ஆந் திகதியன்று எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 4312 ஐ உடைய விசேட அற்றோணித் தத்துவத்தினால், பிலியந்தல, தெல்தர, புதிய வீதி, இலக்கம் 241 என்ற இடத்தில் வதியும் தே.அ.அ.இல. 501460559V ஐ உடைய அன்த்ராதிகே

சில்வா மொஹன்தாஸ் குமாரசிறி என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் 2020.09.01 ஆந் திகதி முதற்கொண்டு இரத்துச் செய்யப்படுவதாக இத்தால் அறிவிக்கின்றேன்.

சில்வா பியுமா தம்மிகா எனப்படும்
அன்த்ராதிகே சில்வா பியுமா தம்மிகா.

10- 36

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இல. 34, டெம்பல் அவெனியூ, மருதானை, கொழும்பு 10 ஐச் சேர்ந்த தற்பொழுது இல. கே.டீ.ஜீ. ஒட்டோ லிங்க் (பிரைவட்) லிமிடட் , ஈ.ஆர்.எப். ஓ.எஸ். , ஓமாப்பு மெயின் ரோட், ஒஷங்கோ, தபால் பெட்டி இல. 2077, நமிபியாவில் வசிப்பவருமாகிய முஹமட் யூஸூப் மொஹமட் யாகூப் ஆகிய நான், இல. 34, டெம்பல் அவெனியூ, மருதானை, கொழும்பு 10 ஐச் சேர்ந்த திருமதி பாத்திமா ஷர்மிலா மஷூர் என்பவருக்கு நமிபியாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வெரோனிக்கா மஹாங்கே ஹெனொங்கோ ஹைக்காலி என்பவரினால் 2018.04.23 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட விஷேட அற்றோணித்தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து குறித்த தத்துவகாரரினால் எனது சார்பில் செய்யப்படும் எந்த செயலுக்கும் நான் பொறுப்பேற்க மாட்டேன் என்றும் அத்தகைய செயல்களெதனையும் நான் ஏற்றங்கீகரிக்க மாட்டேன் என்றும் இத்தால் பொது மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

முஹமட் யூஸூப் மொஹமட்
யாகூப்.

10- 40

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

குருவிட்ட பிரசித்த நொத்தாரிசு திரு. அநுரமனம்பேரி மூலம், 2014, செத்தெம்பர் 05 ஆந் திகதி எழுதி அத்தாட்சிடப்பட்ட, கொழும்பு 6, அருத்துசா ஒழுங்கை, இலக்கம் 5/1 என்ற இடத்தில் வதியும் அப்துல் கபூர் மொஹமட் அமீர் என்பவருக்கு வழங்கப்பட்ட இலக்கம் 6126 ஐ உடைய அற்றோணித் தத்துவம் இத்தால்இரத்துச்செய்யப்பட்டு,இல்லாதொழிக்கப்படுவதாகவும் அதன் கீழாக மேற்கொள்ளப்படும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களுக்கும் இது முதற்கொண்டு நான் பொறுப்பாக இருக்கப் போவதில்லை எனவும் மேற்படி அற்றோணித் தத்துவத்தின் உரித்தாளரான குருவிட்ட, பிரதான வீதி, இலக்கம் 50பீ/1 சுகத் டேலர்ஸில் வதியும் கொடித்துவக்குலாகே சஞ்ஜீவ கொடிதுவக்கு ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

10- 41

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2019.11.20ஆந் திகதியிடப்பட்டு ஐக்கிய இராச்சியத்தின் சொலிசிட்டர் சாமினி உதயகுமாரன் முன்னிலையில் சாவகச்சேரி, பழைய பொலிஸ்நிலைய வீதி இல. 35 ஐச் சேர்ந்த ஜீவேந்திரா முத்துசாமி என்பவரின் பெயரில் United Kingdom , HA 5 5SN Middlesex, Pinner , Greystoke, 41 ஐச் சேர்ந்த அனோஜா முத்துசாமி ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட அற்றோணித் தத்துவப் பத்திரம் 2020.09.17 ஆந் திகதி முதல் மீளப்பெறுவதோடு இரத்துச் செய்யப்படுகிறது. இன்று முதல் அற்றோணித் தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணி தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

அனோஜா முத்துசாமி .

2020.09.17.

10- 89

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ரீ எல் சீ தர்மரத்ன மற்றும் டீ சீ எஸ் ஆனந்த
கணக்கு இல. : 1144 5492 1440

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.04.26 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.07.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2018.07.16ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான அறுபது இலட்சத்து அறுபத்தேழாயிரத்து நூற்றி எண்பத்தி இரண்டு ரூபா ஒரு சதம் (ரூபா 60,67,182.01) 2018, ஏப்பிறல் 09 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஐம்பத்தேழு இலட்சத்து பத்தாயிரத்து அறுநூற்றி எழுபத்தி மூன்று ரூபா எண்பத்தி மூன்று சதம் (ரூபா 57,10,673.83) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பத்து தசம் ஐந்து வீதம் (10.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள் ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின்

அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர் கள் மூலமாக 2020.11.11 ஆந் திகதி மு.ப. 11.00 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

மேல் மாகாணம் கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லெ பத்துவின் மஹரகம நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மஹரகமை கிராம அலுவலர் பிரிவின் பன்னிபிட்டியவில் அமைந்த "மஹாமேகவத்த வீதி மாவத்தை வரிமதிப்பீட்டு இல. 42/1, மஹாமேக எஸ்ட்டேட் என தற்போது அழைக்கப்படும் தஹானம் கெலே" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். சுனில் முனசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, யூன் 03 ஆந் திகதியிடப்பட்ட இல. 2015/94 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 13 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இல. 135 எனும் வரைபடத்தின் லொட்கள் 15 மற்றும் 8; கிழக்கு : இல. 135 எனும் வரைபடத்தின் லொட்கள் 9 மற்றும் 12; தெற்கு : எஸ். எல். டீ. தர்மசேன என்பவர் உரிமை கோரும் காணி மற்றும் இக்காணியின் லொட் C மற்றும் ; மேற்கு : இல. 135 எனும் வரைபடத்தின் லொட்கள் 14 மற்றும் 15 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தாறு தசம் ஏழு பேர்ச். (0ஏ. 0றூ. 26.7பே.) அல்லது 0.0675 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் கூறப்பட்ட இல. 2015/94 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் 13 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெல்கந்தை - நுகேகொடை பதிவு பிரிவிற்குள் சல்பிட்டி கோரலே பல்லெ பத்துவின் மஹரகம நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மஹரகம கிராம அலுவலர் பிரிவின் பன்னிபிட்டியவில் அமைந்த "மஹாமேகவத்த வீதி மாவத்தை (மாஹாமேகாராம வீதி) வரிமதிப்பீட்டு இல. 42/1, மஹாமேக எஸ்ட்டேட் என தற்போது அழைக்கப்படும் தஹானம் கெலே" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. எல். பீரிஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1955, மாச்சு 27 ஆந் திகதியிடப்பட்ட இல. 135 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 13 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : லொட் 8 (மிகத் திருத்தமாக லொட்கள் 15 மற்றும் 8); கிழக்கு : லொட் 12; தெற்கு : எஸ்.எல். டீ . தர்மசேன என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் லொட் C எனக் குறிக்கப்பட்ட இக் காணியின் ஒரு பகுதி மற்றும் மேற்கிற்கு : லொட் 14 (மிகத் திருத்தமாக லொட்கள் 14 மற்றும் 15), ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தாறு தசம் ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 26.7பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம் மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 135 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும். அமைவாக தெல்கந்தை - நுகேகொடை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் M 1668/ 117 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்

10- 172

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

குளோபல் சயன்ஸ்டிஃபிக் சென்ட்டர் ( பிறைவெட்) லிமிட்டெட்
கணக்கு இல. : 0039 1000 6575

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2017.09.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2017.11.24 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2017.11.14ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே நாற்பத்தி மூன்று இலட்சத்து எழுபத்தோராயிரத்து நூற்றி நாற்பத்தாறு ரூபா முப்பத்தொரு சதம் (ரூபா 1,43,71,146.31) 2017, செத்தெம்பர் 13 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே முப்பத்தொன்பது இலட்சத்து எண்பதாயிரம் ரூபா (ரூபா 1,39,80,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினேழு வீதம் (17%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2020.11.03 ஆந் திகதி மு.ப.11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் காணிப் பதிவுப் பிரிவின், மாரவில பதிவுப் பிரிவிற்குள் புத்தளம் பத்துவின் புத்தளம் பத்து

தெற்கு கோரலே முந்தளம பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் மதுரங்குளி கிராம அலுவலர் பிரிவில் அமைந்த உனவெளி மற்றும் பத்தாயாம கிராமத்தில் அமைந்த "கும்புக்ககஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் எம். எம். பீ. டீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, நவெம்பர் 17ஆந் திகதியிடப்பட்ட இல. 6918 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : உனவெலிவத்த என அழைக்கப்படும் காணி; மற்றும் கிழக்கு : வீதி (பிரதேச சபை), எஸ். ஆப்டீன் என்பவரின் காணி மற்றும் காணி அபிவிருத்தி சபையின் காணி; தெற்கு : அன்குட்டன் தாங்கி எனும் பெரியகுளம் தாங்கி; மற்றும் மேற்கு : மாரவிலவத்த என அழைக்கப்படும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் நூறு ஏக்கர் (100ஏ. 0றூ. 0பே.) அல்லது 40.4686 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6918 எனும் வரைபடத்திற்கு அமைவான மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் P 121/36 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணிகளின் ஒன்றிணைப்பாகும் :

1. உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகம் என்பவரால் தயரிக்கப்பட்ட 2009, ஒற்றோபர் 06 ஆந் திகதியிடப்பட்ட இல. 7222 எனும் வரைபடத்தில் லொட் 1.

2. உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். டீ. ஜே. எல். மாட் டினஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2007, நவெம்பர் 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 5687 எனும் வரைபடத்தில் லொட் 1.

3. உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம்.எம்.பீ.டீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2010, ஏப்பிறல் 10 ஆந் திகதியி டப்பட்ட இல. 6714 எனும் வரைபடத்தில் லொட் 1

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-173

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

செநுரி ஒட்டோ டிரேடார்ஸ்
கணக்கு இல. : 0030 1000 3899

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.13 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2019.12.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே எழுபத்தாறு இலட்சத்து இரண்டாயிரத்து இருபது ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூபா 5,76,02,020.45) 2019, ஒற்றோபர் 09ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை முறையே ஐந்து கோடியே நாற்பதொன்பது இலட்சம் ரூபா (ரூபா 5,49,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட கம்பஹா இல. 2531364 எனும் உரித்து உறுதி சான்றிதழ், 2015, யூலை 15, 2016, நவெம்பர் 24 மற்றும் 2018, மே 21 ஆந் திகதிகளிடப்பட்ட கூறப்பட்ட ஈட்டு முறிகளும் மற்றும் இல. 3578 விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 4975 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.11.06 ஆந் திகதி முதலாம் ஆதனம் மு.ப. 11.00 மணிக்கும் இரண்டாம் ஆதனம் பி.ப. 1.30 மணிக்கும் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், திவுலபிட்டி பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் அக்கரங்காஹா இல. 56B கிராம அலுவலர் பிரிவின் அக்கரங்காஹா இல் அமைந்த காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 510127 எனும் கெடஸ்ரல் வரைபடத்தில் கட்ட இல. 03 இன் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்ட 0060 எனும் காணித் துண்டின் எல்லைகளாவன - வடக்கு : காணித்துண்டு 54 (வீதி- பிரதேச சபை); கிழக்கு : இங்கமைந்த காணித் துண்டு 208; தெற்கு : இங்கமைந்த காணித் துண்டு 207 ; மற்றும் மேற்கு: இங்கமைந்த காணித்துண்டு 205 (வீதி), இங்கு லொட் 206 மற்றும் 61 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு ஏக்கர் ஒரு றூட் மற்றும் இரண்டு தசம் ஐந்து பேர்ச் (1ஏ. 1றூ. 2.5பே.) அல்லது சைபர் தசம் ஐந்து ஒன்று இரண்டு ஒன்று ஹெக்டேயார் (0.5121 ஹெக்.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 510127 எனும்

கெடஸ்ரல் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் உரித்து உறுதி இல. 2531364 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூறப்பட்ட இல. 510127 எனும் கெடஸ்ரல் வரைபடத்தில் காணித் துண்டு 205 இன் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

(கம்பஹா இல. 2531364 எனும் உரித்து உறுதி சான்றிதழ், 2015, யூலை 15, 2016, நவெம்பர் 24 மற்றும் 2018, மே 21ஆந் திகதிகளிடப்பட்ட ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. வட மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தெற்கு பிட்டிகல் கோரலே கம்மல் பத்துவின் வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் உல்ஹிட்டியாவ வடக்கு கிராம அலுவலர் பிரிவின் உல்ஹிட்டியாவ கிராமத்தில் அமைந்த "தல்காஹாவத்த எனும் மேபல்ஸ்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். எஸ். ஏ. பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2016, ஏப்பிறல் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 5396 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு: டீ. பீட்டார்ஸ் என்பவர் உரிமம் கோரும் காணி; கிழக்கு: டீ. பீட்டார்ஸ் என்பவர் உரிமம் கோரும் காணிகள்; தெற்கு : வீதி (பிரதேச சபை) – மேபல்ஸ் வீதி மற்றும் மேற்கு: உபாலி தாபரேரா உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச் (0ஏ. 0றூ.30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5396 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட இல. 5396 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1 கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

கூறப்பட்ட கிராமத்தில் அமைந்த "தல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவை யாளர் வை. எம். ஆர். யாப்பா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஒற்றோபர் 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 8316 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு: இதே காணியின் எஞ்சிய பகுதி; கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. சி. எஸ். பெர்ணாண்டோ என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 118/71 எனும் வரைபடத்தில் லொட் 3A; தெற்கு : மேபல்ஸ் வீதி மற்றும் மேற்கு: உபாலி தாபரேரா உரிமம் கோரும் காணி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பது பேர்ச் (0ஏ. 0றூ. 30பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8316 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் G 173/113 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 3578 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-174

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ஒட்டோவின் டிரேடிங் இன்டர்நெஷனல் பிரைவட் லிமிட்டட்
கணக்கு இல. : 0194 1000 0272

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.08.02 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.07.22ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஏழு கோடியே ஐம்பத்து நான்கு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து நூற்றி தொண்ணூற்றி மூன்று ரூபா எண்பத்தேழு சதம் (ரூபா 7,54,56,193.87) 2019, ஏப்பிறல் 17 ஆந் திகதி முதல் 2307, 2564, 4025, 5089, 2566, 3186, 4027 மற்றும் 5091 என்ற இலக்கங்களைக் கொண்ட ஈட்டுமுறிகளின் மீது அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தைந்து இலட்சம் ரூபா (ரூபா 75,00,000.00) பணத்துக்காக at the rate of Average Weighted Prime Lending Rate of + Four Decimal Five Per centum (4.5%) (Floor Rate of 16.5%) per annum மற்றும் மேலும் எழுபத்தொன்பது இலட்சம் ரூபா (ரூபா 79,00,000.00) பணத் துக்காக வருடாந்தம் நூற்றுக்கு ஒன்பது தசம் ஐந்து வீதம் (9.5%) மேலும் ஐந்து கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து முப்பத்தையாயிரத்து ஆறு ரூபா இருபத்தொன்பது சதம் (ரூபா 5,49,35,006.29) பணத்துக்காக வருடாந்தம் நூற்றுக்கு பதினாறு தசம் ஐந்து (16.5%) வட்டியுடன் விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள மேற்கூறப்பட்ட சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபதி என்பவர்கள் மூலமாக 2020.11.02 ஆந் திகதி மு.ப. 11.00 மணிமுதல் 8411 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின்

லொட் A மற்றும் மு.ப. 11.30 மணி முதல் 5108ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் லொட் 1 மற்றும் 2 அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தெற்கு பிட்டிகல் கோறளே யட்டிகலன் பத்துவ நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் மாரவில 512ஆம் இலக்கத்தைக் கொண்ட கிராம அலுவலர் பிரிவின் ஹொரகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள "T.P. இல. 99188 X170 என்ற இலக்கத்தைக் கொண்ட மொரகவத்த" காணிக்கு எம். ஜே. கோமஸ் என்ற நிலஅளவையாளரால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 2006, நவெம்பர் 09 ஆந் திகதியிடப்பட்ட 8411 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு பிரிக்கப்பட்டு லொட் A என்ற அடையாளம் இடப்பட்டுள்ள காணியின் பகுதிக்கு எல்லைகள்- வடக்கு : எரிக்சூரியசேனவின் காணி ; கிழக்கு : சிலாபத்தில் இருந்து கொழும்பு வரையான பிரதான வீதி; தெற்கு : வீடுகளில் இருந்து பிரதான பாதை வரை பிரதேச சபை வீதி மற்றும் மேற்கு: இங்கு லொட் B என்ற எல்லைகளுக்குள் அமைந்துள்ள 25 பேர்ச் (0ஏ. 0றூ. 25பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 8411 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்துக்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 207/85 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈட்டு பிணை முறி இல. 2307, 2564, 4025 மற்றும் 5089 ஊடாக மற்றும் அதன் கீழ் அடகு வைத்து பிணையாக வைக்கப்பட்டுள்ளது.)

2. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், தெற்கு பிட்டிகல் கோறளே யட்டிகலன் பத்துவ நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் மற்றும் மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவின் துவவத்த கிராம அலுவலர் பிரிவின் மாரவில கிராமத்தில் அமைந்துள்ள "துவவத்த" என அழைக்கப்படுகின்ற காணிக்கு எம். எம். பி. டீ. பெரேரா என்ற உத்தரவுபெற்ற நிலஅளவையாளரால் தயாரிக்கப்பட்டுள்ள 2006, பெப்புருவரி 17 ஆந் திகதியிடப்பட்ட 5108 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தின் எல்லைகள் வரையறுக்கப்பட்டு பிரிக்கப்பட்டு லொட் 1 மற்றும் 2 என்ற அடையாளம் இடப்பட்டுள்ள காணியின் பகுதிக்குரிய எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. டபிள்யூ. ஏ. லியோனி பெர்னாந்துவின் காணி மற்றும் வேறு நபர்களின் காணிகள் ; கிழக்கு : நெரிய ; தெற்கு : நெரிய மற்றும் ஸ்ரீலங்கா டிஸ்டிலரிஸ் நிறுவனம் மூலம் உரிமை கோரப்படுகின்ற காணி மற்றும் மேற்கு : ஸ்ரீலங்கா டிஸ்டிலரிஸ் நிறுவனத்தால் உரிமை கோரப்படுகின்ற காணி மற்றும் தலவில இருந்து மாரவில வரை வெல்ல வீதி என்ற எல்லைக்குள் அமைந்துள்ள ஐந்து ஏக்கர் மூன்று றூட் இருபத்திமூன்று தசம் ஏழு சைபர் பேர்ச் (5ஏ. 3றூ. 23.70பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட 5108 ஆம் இலக்கத்தைக் கொண்ட வரைபடத்துக்கு அமைவாக மாரவில காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் K 129/234 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(ஈட்டு பிணை முறி இல. 2566, 3186, 4027 மற்றும் 5091 ஊடாக மற்றும் அதன் கீழ் அடகு வைத்து பிணையாக வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 175

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எஃப் ஜீ என் டயனா
கணக்கு இல. : 1193 5741 4411

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.05.30 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.09.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.08.23ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எட்டு இலட்சத்து நாற்பத்தொன்பதாயிரத்து முந்நூற்று எண்பது ரூபா ஐம்பத்தைந்து சதம் (ரூபா 1,08,49,380.55) 2019, மே 24 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே இரண்டு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து ரூபா அறுபத்து நான்கு சதம் (ரூபா 1,02,60,275.64) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினான்கு வீதம் (14%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 5675 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற

ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.10.22 ஆந் திகதி மு.ப. 10.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குறு கோரளேதெற்கு ராகம் பத்துவின் வத்தளை பிரதேச சபை (உப அலுவலகம் ஹெந்தலை) எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் திம்பிரிகஸ்யாய இல. 170 கிராம அலுவலர் பிரிவின் திம்பிரிகஸ்யாயவில் அமைந்த எல வீதி, வரிமதிப்பீட்டு இல. 70/ 08A ஐ ஏற்ற "ஹெதவக்ககாஹா குருந்துவத்த" என்றழைக்கப்படும்காணிக்கு உத்தரவுபெற்றநில அளவையாளர் எச். ஆர். சமரசிங்ஹ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011, சனவரி 04 ஆந் திகதியிடப்பட்ட (2011, பெப்புருவரி 14 ஆந் திகதி அசல் பிரதி என அத்தாட்சிப்படுத்தப்பட்ட) இல. 5809 எனும் வரைபடத்தில் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 7 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன – வடக்கு: லொட் 6 ; கிழக்கு : லொட் 5 ; தெற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 2811 எனும் வரைபடத்தில் லொட் 2 மற்றும் மேற்கு : வீதி மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட இல 2226 எனும் வரைபடத்தில் லொட் 3 ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு தசம் பூச்சியம் இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 8.02பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 5809 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் L 311/ 01 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கீழே காட்டப்பட்டதன் மீதும் அதன் கீழும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1986, மே 30 ஆந் திகதியிடப்பட்ட இல. 2220 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 11 (வீதிக்கான ஒதுக்கம்).

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 176

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

பீ ஏ ஏ டீ டி சேரம்
கணக்கு இல. : 1005 5046 3258

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.10.31 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.12.06 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.12.04ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எழுபத்தேழு இலட்சத்து ஐம்பத்தி நான்காயிரத்து முந்நூற்றி இருபத்தி ஐந்து ரூபா முப்பத்தி மூன்று சதம் (ரூபா 77,54,325.33) 2019, ஒற்றோபர் 05 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி நான்கு இலட்சத்து தொண்ணூறாயிரத்து ஐந்நூற்றுப் பதினாறு ரூபா நாற்பத்தி ஏழு சதம் (ரூபா 74,90,516.47) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதிமூன்று வீதம் (13%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 2331 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.11.10 ஆந் திகதி மு.ப. 10.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை**

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளே அதிகாரி பத்துவின் பியகம பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் கல் ஏதண்ட கிராம அலுவலர் பிரிவின் கல் ஏதண்ட கிராமத்தில் அமைந்த கல் ஏதண்ட வீதி, வரிமதிப்பீட்டு இல. 139/34 ஐ ஏற்ற "ஹல்காஹாவத்த மற்றும் மீகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. சீ. எம். எஸ். விமலரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஓகத்து 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 134/2015 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B3B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன– வடக்கு: இங்கு லொட் B3A; கிழக்கு: இல. 8863 எனும் வரைபடத்தின் லொட் B5 (15 அடி அகல வீதி); தெற்கு: இங்கு லொட் B3C மற்றும் மேற்கு : முன்னர் பீரிஸ் என்பவரின் காணி, ஆகிய

இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் ஆறு தசம் ஒன்று பேர்ச் (0ஏ. 1றூ. 6.1பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல 134/2015 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

இல. 134/2015 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் B3B கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.

மேற் கூறப்பட்ட கல் ஏதண்ட கிராமத்தில் அமைந்த "ஹல்காஹாவத்த மற்றும் மீகாஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் வீ. எஃப். ஜே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 1984, மே 05 ஆந் திகதியிடப்பட்ட இல. 8863 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B3 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: லொட் B2 ; கிழக்கு: லொட் B5 ; தெற்கு: லொட் B4 மற்றும் மேற்கு : லொட் A, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இரண்டு றூட்கள் மற்றும் முப்பத்தி ஒன்பது தசம் ஆறு பேர்ச் (0ஏ. 2றூ. 39.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல 8863 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் N 270/54 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 8863 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் B5 இன் ஊடாகவும் அதன் மீதும் அதன் கீழும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகள் மற்றும் ஏனைய உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10- 177

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

என். ஆர். டபிள்யூ. சில்வா
கணக்கு இல. : 0062 5000 6886

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2019.02.28 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2019.05.10 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2019.05.02ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான எண்பத்தி இரண்டு இலட்சத்து எழுபத்தி ஐந்தாயிரத்து தொண்ணூற்றி எட்டு ரூபா அறுபத்தி மூன்று சதம் (ரூபா 82,75,098.63) 2019, சனவரி 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட்ட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை எழுபத்தி எட்டு இலட்சம் ரூபா (ரூபா 78,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினைந்து தசம் ஐந்து வீதம் (15.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கண்டி உத்தரவுபெற்ற ஏலதாரர்களான ஐ. டப்ளியூ. ஜயசூரிய என்பவர்கள் மூலமாக 2020.11.05 ஆந் திகதி மு.ப. 11.45 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### அட்டவணை

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், உஹன பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவின் உஹன W/88 எனும் கிராம அலுவலர்பிரிவின் உஹன கிரமத்தில் அமைந்த "எலபொடவத்த (இன் ஒரு பகுதி)" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ஜீ. அமர தேவ என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 19ஆந் திகதியிடப்பட்ட இல. 127/ 2015 எனும் வரைபடத்தில் அனைத் தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: டீ. எம். கிரிபண்டா என்பவர் உரிமம் கோரும் தோட்டம்; கிழக்கு: எச். கே. தர்மதாச என்பவர் உரிமம் கோரும் தோட்டம்; தெற்கு: இல. 17/2011 எனும் வரைபடத்தின் லொட் B மற்றும் பிரவேசம்; மேற்கு: டீ. ஜயவீர என்பவர் உரிமம் கோரும் தோட்டம், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஒன்று தசம் நான்கு பேர்ச் (00ஏ. 00றூ. பே21.4) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 127/ 2015 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் X மிகத் திருத்தமாக கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட உஹன கிரமத்தில் அமைந்த "எலபொடவத்த (இன் ஒரு பகுதி)" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. ஜீ. அமரதேவ என்பவரால் தயாரிக் கப்பட்ட 2011, பெப்புருவரி 05ஆந் திகதியிடப்பட்ட இல.17/2011 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: டீ. எம். கிரிபண்டா

என்பவர் உரிமம் கோரும் தோட்டம்; கிழக்கு: எச். கே. தர்மதாச என்பவர் உரிமம் கோரும் தோட்டம்; தெற்கு: லொட் இல. B; மேற்கு: டீ. ஜயவீர என்பவர் உரிமம் கோரும் தோட்டம், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் இருபத்தி ஒன்று தசம் நான்கு பேர்ச் (00ஏ. 00றூ. 21.4பே.) ஐக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 17/2011 எனும் வரைபடத்திற்கு அமைவாக அம்பாறை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் H 03/59 இல் பதிவு செய்யப்பட்டள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-178

---

**சம்பத் வங்கி பீஎல்சீ**

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

நியூ ஆசிரி லங்கா கார் சேல்ஸ்
கணக்கு இல. : 0040 1000 4522

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2018.09.27 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2018.10.19 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)2018.10.15ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஐந்து கோடியே தொண்ணூற்றி இரண்டு இலட்சத்து பதினோராயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தி எட்டு ரூபா எழுபத்தாறு சதம் (ரூபா 5,92,11,958.76) 2018, ஓகத்து 16 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை நாலு கோடி ரூபா (ரூபா 4,00,00,000.00) இத்துடன் மேலதி வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) மேலும் ஒரு கோடியே அறுபத்தைந்து இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து ஐநூற்று முப்பது ரூபா இருபத்தொரு சதம் (ரூபா 1,65,99,530.21) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு வீதம் (4%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ . சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2020.11.13 ஆந் திகதி மு.ப. 10.30 மணிமுதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

**மேற்குறிப்பீடு செய்யப்பட்ட முதலாவது அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரலே பல்லே பத்து மஹரகமை பிரதேச செயலாளர் பிரிவின் மஹரகமை நகர சபை எல்லைகளுக்குள் பன்னிபிட்டிய தெற்கு 529A கிராம அலுவலர் பிரிவிற்குள் துபஸ்ஸர தெப்பானமையில் அமைந்த பொரள்ளை வீதி, வரிமதிப்பீட்டு இல. 173/1 ஐ ஏற்ற "புஸ்வெள்ளஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் சிரில் விக்ரமகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014, சனவரி 04 ஆந் திகதியிடப்பட்ட இல. 7838 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் X எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : புஸ்வெள்ளஹேன (ஒரு பகுதி) (இல. 204B எனும் வரைபடத்தில் லொட் A2) ; கிழக்கு: இல. 204B எனும் வரைபடத்தில் லொட் A1 மற்றும் இல. $238^{B}$ எனும் வரைபடத்தில் லொட் 1B மற்றும் 1C (15 அடிகள் அகல வீதி) ; தெற்கு : இல. 173 எனும் வரைபடத்தில் லொட் 4 (புஸ்வெள்ளஹேன (ஒரு பகுதி) மற்றும் இல. $238^{B}$ எனும் வரைபடத்தில் லொட்கள் 1D, 3B மற்றும் 4; மற்றும் மேற்கு : காலம்சென்ற அர்னோலிஸ் மற்றும் ஏனையோரின் காணிகள், ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பத்து தசம் இரண்டு பேர்ச் (0ஏ. 1றூ. 10.2பே.) அல்லது 0.1270 ஹெக்டெயர்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 7838 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட லொட் X கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:-

மேற்கூறப்பட்ட தெப்பானமையில் அமைந்த "புஸ்வெள்ள ஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவு பெற்ற நில அளவையாளர் பீ. பீலிக்ஸ் டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1992, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட இல. $238^{B}$ எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் $3^{A}$ எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : 204C எனும் வரைபடத்தில் லொட் A; கிழக்கு : லொட்கள் $1^{B}$ , $1^{C}$ (15அடி அகல வீதிக்கான ஒதுக்கம்) மற்றும் இங்கமைந்த லொட் 4, லொட்கள் $3^{B}$, 4, மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நானயக்கார என்பவரால் தயாரிக்கப்பட்ட இல. 173 எனும் வரைபடத்தில் லொட் 4; மற்றும் மேற்கு : அரச விளையாட்டு மைதானம் மற்றும் அர்னோலிஸ் முதலாளி என்பவரின் வாரிசுகள் உரிமம் கோரும் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் பத்து தசம் இரண்டு சைபர் பேர்ச். (0ஏ. 1றூ. 10.20பே.) அல்லது 0.1270 ஹெக்டெயார்கள் விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட

இல. 238B எனும் வரைபடத்திற்கு அமைவாக தெல்கந்தை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் B 190/51 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழி மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது

1. உத்தரவுபெற்ற நில அளவையாளர் டீ. ஜே. நானயக்கார என்பவரால் தயரிக்கப்பட்ட 1957, யூன் 09 ஆந் திகதியிடப்பட்ட இல. 173 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2 (10 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்)

2. உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஃபீலிக்ஸ் டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, செத்தெம்பர் 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 283 A எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 2 (10 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்)

3. உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. ஃபீலிக்ஸ் டயஸ் என்பவரால் தயரிக்கப்பட்ட 1992, பெப்புருவரி 10 ஆந் திகதியிடப்பட்ட இல. 283 B எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட லொட் 1C (15 அடிகள் அகல வீதிக்கான ஒதுக்கம்)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

10-179

---

## அமானா வங்கி பீ.எல்.சீ.- ஓட்டமாவடி கிளையின் பகிரங்க ஏல விற்பனை

1990ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கவங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் அமானா வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் நாகூர் லெப்பை ஹைதர் அலி மற்றும் ஹைதர் அலி மொஹமட் முனாஸ் ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்பட்ட ஆதனம்.

இவ் ஆதனத்தை 2020.11.04 ஆந் திகதி மு.ப.10.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விபரம்.-**

**மட்டக்களப்பு மாவட்டம், கோரளைப்பற்று மத்திய பிரதேச செயலாளர் பிரிவு, பிறைந்துரைச்சேனை பிரதேசத்தில் கோரளைப்பற்று பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஹுதா வீதியில் ( Hudah Road) அமைந்துள்ள காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் K.A.E.K. திஸ்ஸ வீரசிங்ஹ என்பவரினால் 2014.06.18 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட 587/ 2014 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் சகலதுமாகும். இது 15.46 பேர்ச் பரப்பளவானது.**

**ஆதனத்தை வந்தடைதல்.-** வாழைச்சேனை சந்தியிலிருந்து திருகோணமலை வீதியில் சுமார் 1.1கி.மீ. தூரம் சென்று வலதுபக்கமாக திரும்பி ஹுதா பள்ளி வீதிக்குத் திரும்பி அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையில் வலதுபக்கத்தில் பாதையின் எல்லையில் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2018.06.22ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2018.06.22ஆந் திகதிய "திவயின", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-**விற்பனை தீர்க்கப் பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்த வேண்டும்:-

(1) கொள்முதல் விலையின் 10% ( நூற்றுக்குப் பத்து சதவீதம்);
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
(3) ஏலவிற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2.5% (நூற்றுக்கு இரண்டரை சதவீதம்) ;
(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;
(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் 1,500.00 ரூபா;
(6) நொத்தாரிசுக் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் 3,000 ரூபா.

கொள்வனவு விலையின் மிகுதி 90% , இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.-** முகாமையாளர், அமானா வங்கி பீஎல்சீ , ஓட்டமாவடி கிளை, பிரதான வீதி, ஓட்டமாவடி. தொலைபேசி: 065-7756009 , 065- 7756225.

ஐ. டபிள்யூ. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும்வர்த்தக
வங்கிகளினால் உத்தரவாதம்
பெற்ற ஏல விற்பனையாளர்.

இல.369/1,
துட்டுகெமுனு மாவத்தை,
லேவெல்ல பாதை,
மாவில்மட, கண்டி
தொலைபேசி : 081-2210595 - 071-8446374, 071- 4962449.

10-101

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - அம்பாறைக் கிளை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ்*

*பகிரங்க ஏல விற்பனை*

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் கோனார முதியன்சேலாகே கருனாவதி மற்றும் கோதாகொட ஆரச்சிலாகே ரொஹான் தமிந்த கோதாகொட ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ்விபரிக்கப்படும் ஆதனம்**

*2020.11.05ஆந் திகதி மு.ப. 9.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.*

**ஆதனத்தின் விபரம்.-**

*கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டம், வெவ்கம்பற்று வடக்கு, பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் மரிட்டிமேபற்று பிரதேச சபை பரிபாலன எல்லைக்குட்பட்ட இல. W/86 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட, பரகஹகெலே கிராமத்தில் 2 ஆம் கிராமத்தின் வெளியே இங்கினியாகல அம்பாறை பிரதான வீதியில் அமைந்துள்ள "லொட் 03" எனும் பிரித்தெடுக்கப்பட்ட காணியும் வளவும் உரிமம் பெற்ற நில அளவையாளர் அஹமட் M. மஹரூப் அவர்களினால் தயாரிக்கப்பட்ட 12388 ஆம் இலக்க 2012.05.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் மற்றும் சகலதுமாகும். இது 02 றூட் 16 பேர்ச் பரப்பளவானது.*

**ஆதனத்தை வந்தடைதல்:** *அம்பாறை நகரத்தின் மணிக்கூட்டு கோபுர சந்தியிலிருந்து இங்கினியாகல பாதையில் சுமார் 11.5 கி.மீ. தூரம் புதிய நீர் வெளியேற்றும் (Water Pumping Station) நிலைய பாதை வரை வந்து புதிய நீர் வெளியேற்றும் (Water Pumping Station) நிலைய பாதைக்குப் பிரவேசித்து சுமார் 100 மீற்றர் தூரம் சென்றால் இவ்வாதனம் இப்பாதையின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.*

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** *2020.08.14 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2020.08.21 ஆந் திகதிய "மவ்பிம", "டேலி மிரர் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.*

**கொடுப்பனவு முறை.-** *விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-*

*(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;*

*(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;*

*(3) ஏல விற்பனையாளர் கட்டணம் விற்பனை விலையில் 2 1/2 % (நூற்றுக்கு இரண்டரை);*

*(4) சகல பகிரங்கப்படுத்தல் செலவு ;*

*(5) இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 1500.00;*

*(6) நொத்தாரிஸ் கட்டணமும் விற்பனை நிபந்தனை அத்தாட்சிப்படுத்தல் கட்டணமும் ரூ. 2000.00.*

*கொள்முதலில் மிகுதி 90% இலங்கை அரசினால் அல்லது வேறு அதிகார சபையினால் விதிக்கப்படும் வேறு வரிகளும், தீர்வை வரி, விற்பனை வரி அல்லது வேறு கட்டணங்கள் ஏதாயினும் செலுத்தப்படவிருப்பின் அவற்றுடன் விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

